மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 55/24

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ஜெயக்கொடி | தேதி : 09.02.26 |
| வயது : | க/பெ : அந்தோணிராஜ் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**09.02.26 குறுக்கு விசாரணை**

1.தாசன் சாம்பான் என்னுடைய தாத்தா என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாசன் சாம்பானின் மகன் கோவில் பிள்ளை என்பவர் என்னுடைய தகப்பனார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. கோயில் பிள்ளை மனைவி ஜேசு மரியாள் பிறந்த ஊர் சாத்தான்குளம் வட்டம், முதலூர் கிராமம், ஆத்திக்காடு என்றால் சரிதான். ஜேசு மரியாளுடன் உடன்பிறந்தவர்கள் ராஜம்மாள், ஞானசெல்வம் என்ற இரு சகோதரிகளும், செல்வம் என்ற சகோதரனும் என்றால் சரிதான்.

2.கோயில் பிள்ளை 15.11.1981ல் இறந்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 கோயில்பிள்ளை இறப்பு சான்றிதழ் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருச்செந்தூரில் நான் தாக்கல் செய்த மனுவின் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 இறப்பு சான்றிதழில் கண்ட தேதி என்னுடைய வசதிக்கு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.09 20:04:16 +0530

ஏற்ப பொய்யான தேதி குறிப்பிட்டு பெறப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 உண்மையான விபரங்கள் அடங்கியது அல்ல என்றால் சரியல்ல.

3.கோயில்பிள்ளை 03.07.1983 ல் தான் உண்மையில் இறந்தார் என்றால் சரியல்ல. கோயில்பிள்ளை உண்மையான இறந்த தேதி அரசு ஆவணங்களில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோயில்பிள்ளையின் மனைவி ஜேசு மரியாள் 11.06.2007 ல் இறந்தார் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் தந்தை பெயர் பாலையா என்றால் சரிதான். பாலையா 30.09.2008 ல் இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4.கோயில்பிள்ளை –ஜேசுமரியாள் தம்பதியினருக்கு வாரிசாக நான் வளர்ப்பு குழந்தையாக இருந்தேன் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. கோயில்பிள்ளை –ஜேசுமரியாள் தம்பதியினருக்கு குழந்தை எதுவும் பிறக்கவில்லை என்றால் சரிதான். நான் பொய்யான ஆவணங்களை ஜோடனை செய்து நீதிமன்றத்தை ஏமாற்றி வா.சா.ஆ 1 தீர்ப்பாணையினை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

5.வா.சா.ஆ 1 தீர்ப்பாணை பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 தீர்ப்பாணை அடிப்படையில் தபசில் சொத்தில் எனக்கு எவ்வித பாக உரிமையும் மற்றும் தனித்த உரிமையும் ஏற்படக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் கோயில்பிள்ளை –ஜேசுமரியாளின்

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.09 20:04:20 +0530

வளர்ப்பு பிள்ளையும் கிடையாது, வாரிசும் கிடையாது என்றால் சரியல்ல. நான் லாசர்–ராஜம்மாள் தம்பதியினருக்கு பிறந்த 2ம் குழந்தை என்றால் சரிதான்.

6.பிரதிவாதிகளின் தந்தை பாலையா கோயில்பிள்ளையின் உடன்பிறந்த இளைய சகோதரர் என்றால் சரிதான். கோயில்பிள்ளை –ஜேசுமரியாள் தம்பதியினர் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிகள் தான் கோயில்பிள்ளை –ஜேசுமரியாள் தம்பதியினரின் வாரிசுகள் என்றால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதியிடம் பாகம் பிரித்து கேட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

7.1ம் தபசில் சொத்தில் எனக்கு பாதி பாகம் உள்ளதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்தினை பொறுத்து எனக்கு எந்த கூட்டு அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்திற்கு பிரதிவாதிகள் தான் நில தீர்வை செலுத்தி வருகிறார்கள் என்றால் ஆம். 1ம் தபசில் சொத்திற்கு நான் நில தீர்வை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி முத்துராஜ்ன் தாயார் 1981ல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. என் அறிவுக்கு எட்டிய வரையில் 1ம் பிரதிவாதியின் தாயார் இறந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் தெரியாது.

8.1ம் பிரதிவாதியின் தாயார் இறந்த எத்தனை வருடங்கள் ஆனது என்று சொன்னால் எனக்கு பாதகமாக அமையும் என்பதால் தான் தெரியாது என மழுப்பலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தாயார் இறந்த பிறகு அவரை ஜேசுமரியாள் தான் தன்னுடன் வைத்து வளர்த்து படிக்க

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.09 20:04:25 +0530

வைத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் வளர்த்தோம். நாங்கள் என்பது யார் என்றால் நானும், ஜேசுமரியாளும் ஆவோம். ஜேசுமரியாள் மட்டும் தான் 1ம் பிரதிவாதியை அவருடன் வைத்து வளர்த்து படிக்க வைத்தார் என்றால் சரியல்ல.

9.எனக்கு 1984 ல் திருமணம் ஆனது. என் திருமணத்திற்கு பிறகு நான் என் கணவருடன் நாசரேத்தில் அவரது வீட்டில் வசித்து வந்தேன். ஜேசுமரியாள் தான் 1ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைத்து இறுதி காலம் வரை அவருடன் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து நத்தம் நிலம் தானா என்றால் ஆம். 2ம் தபசில் சொத்தில் மட்டப்பா ஓட்டடுக்கு வீடு உள்ளது என்றால் ஆம். அந்த வீட்டின் பழைய கதவு எண் 4/93 என்றால் ஞாபகம் இல்லை. அதற்கு முந்தைய கதவு எண் 4/127 என்றால் ஞாபகம் இல்லை.

10.1ம் தபசிலில் ஜேசுமரியாளுக்கு பாத்தியப்பட்ட பாதி பாகத்தினையும், 2ம் தபசிலில் ஜேசுமரியாளுக்கு பாத்தியப்பட்ட அடிமனை மற்றும் அதில் உள்ள வீட்டில் அவருக்குள்ள பாதி பாகத்தினையும் பிள்ளையன்மனை ஊரில் வசிக்கும் வெள்ளச்சாமி பிள்ளை குமாரர் முருகேசன், பிள்ளையன் மனை – வடக்கூர் முண்டன் மனைவி இசக்கியம்மாள், ஜோசப் குமாரர் எட்வின் தாமஸ் ஆகியோர் முன்னிலையில் 2006ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்த வாய் மொழி ஏற்பாட்டில் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கினார்கள் என்றால் சரியல்ல.

11.அதுமுதல் 1ம் பிரதிவாதி மேற்படி வீட்டிற்கு தனித்த பாத்தியதையுடன் வீட்டு வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் தெரியாது. நான் மேற்படி

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.09 20:04:29 +0530

வீட்டிற்கு ஒருபோதும் வீட்டு வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். அதனால் 2ம் பிரதிவாதி 2ம் தபசில் சொத்தை ஆக்கிரமித்து உள்ளதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தில் உள்ள வீட்டினை ஒட்டி கீழ்புறம் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான்.

12.மேற்படி வீடுகள் பழமையான வீடுகளாக இருந்தன என்றால் சரிதான். மேற்கு பக்கம் உள்ள வீட்டை 1ம் பிரதிவாதியும், கிழக்கு பக்கம் உள்ள வீட்டை 2, 3 பிரதிவாதிகளும் சேர்ந்து ஏக காலத்தில் 2018ம் ஆண்டில் மேற்கூரையை அப்புறப்படுத்திவிட்டு கான்கிரீட் வீடாக கட்டியுள்ளனர் என்றால் சரிதான். அவ்வாறு கட்டும் போது சுவரினையும் கொத்தி பூசியுள்ளனர் என்றால் தெரியாது. மேற்படி வீட்டை கட்டும் போது என் கணவர் கட்டுமான பணி செய்தார். மேற்கு பக்கம் உள்ள கதவு எண் 4/127 கொண்ட வீட்டிற்கு 1ம் பிரதிவாதி பெயரில் வீட்டு வரி விதிப்பு மாற்றம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதிதான் வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் ஆம்.

13.நாங்கள் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் அதில் இருந்த வீடு ரூபாய் 5 லட்சம் மதிப்பு இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. என் கணக்கு படி அதன் உத்தேச மதிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. அந்த வீட்டின் மதிப்பு ரூபாய் 5 லட்சத்திற்கும் மேல் இருக்கும் என்றும் அதனை ஒப்புக்கொண்டால் எனக்கு பாதகமாக அமையும் என்பதால் தான் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் எனக்கு எக்காலத்திலும் எவ்வித பாத்தியதையும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.09 20:04:33 +0530

14.1ம் தபசில் சொத்து பிரதிவாதிகளுக்கு கூட்டாகவும், 2ம் தபசில் சொத்து 1ம் பிரதிவாதிக்கு தனித்தும் பாத்தியப்பட்டு பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாமல் பொய்யான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள வழக்கு மூலங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. தாவா வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15.1ம் தபசில் சொத்து வழக்குரையில் சரியாக விவரிக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் கேட்டுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் என் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.09 20:04:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.